



To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852



## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 02.04.2026 | Thursday | 3.00 pm | Maundy Thursday<br>Patham Kazhuvuthal<br>Holy Mass | Unnamalakadai |
| 03.04.2026 | Friday | 7.30 am | Good Friday | Themanoor |
| 04.04.2026 | Saturday | 8.00 pm | Easter Mass | Themanoor |
| 06.04.2026 | Monday | 10.00 am<br>3.00 pm | Cancer Campaign<br>UCC-Election Awareness Meet | MIDS<br>Azhagiyamandapam |
| 07.04.2026 | Tuesday | 6.30 am | Holy Mass<br>Pathayathirai in Memory of<br>Bishop Lawrence Mar Ephraem | Vellalumbu |
| 08.04.2026 | Wednesday | 6.30 am<br><br>11.00 am | Commemeration Mass of<br>Bishop Lawrence Mar Ephraem<br>Meeting the Fathers<br>District wise | Cathedral<br><br>Bisop's House |
| 09.04.2026 | Thursday | 9.00 am | Meeting the Fathers<br>District wise | Bisop's House |
| 10.04.2026 | Friday | 6.00 pm | Hall Blessing | Kirathoor |
| 11.04.2026 | Saturday | 2.30 pm | Priestly Ordination | Ambilikonam |
| 12.04.2026 | Sunday | 7.00 am<br>9.00 am<br>4.00 pm | First Mass | Chellamkonam<br>Ambilikonam<br>Mathoorkonam |
| 14.04.2026 | Tuesday | 9.30 am | Fiat Mission | Thirissur |
| 20.04.2026 | Monday | | Marriage | Manjakkala |
| 21.04.2026 | Tuesday | 6.30 am<br><br>9.00 am | Jubilee Mass<br><br>Priest's General Body Meeting | DM Provincial<br>House - Mtm<br>MIDS |
| 22.04.2026 | Wednesday | 6.00 pm | Feast Mass | Soosaipuram |
| 24.04.2026 | Friday | 10.30 am | Annual Day<br>Mar Chrysostom B.Ed. College | Kirathoor |
| 26.04.2026 | Sunday | 7.00 am<br>4.00 pm | Feast Mass<br>Feast Mass<br>Pinkulam Parish | Chellamkonam<br>Parassala<br>Diocese |
| 27.04.2026 | Monday | 10.00 am | Marriage | Pinkulam |
| 28.04.2026 | Tuesday | 6.30 am | Minor Orders<br>Vestition | Minor Seminary,<br>Elavuvilai |
| 29.04.2026 | Wednesday | 6.00 pm | Feast Mass | Anakkarai |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 23 ஏப்ரல் 2026 இதழ். 04

***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*






மலர். 23 மார்ச் 2026 இதழ். 03

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the Diocese of Marthandam




மலர்.23 ஏப்ரல் 2026 இதழ்.04

## முக்கியமான நாட்கள்

ஏப்ரல் 2026

| | |
|---|---|
| 01 | கண் பார்வையின்மை தடுப்பு வாரம் |
| 02 | புனித வியாழன் |
| 05 | தேசிய கடல்சார் தினம், ஈஸ்டர் ஞாயிறு |
| 07 | உலக சுகாதார தினம் |
| 10 | உலக ஹோமியோபதி தினம் |
| 11 | தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் |
| 11 | தேசிய செல்லப்பிராணி தினம் |
| 15 | உலக கலை தினம் |
| 18 | உலக பாரம்பரிய தினம் |
| 22 | உலக பூமி தினம் |
| 23 | உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம் |
| 26 | உலக அறிவுசார் சொத்துரிமை தினம் |
| 28 | பணியிடப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான உலக தினம் |

## உள்ளடக்கம்


1. Circular 03
2. இளங்குருமடச் செய்திகள் 10
3. தவக்கால தியானம் 11
4. பெயர்விழா கொண்டாட்டம் 12
5. மறைபரப்புத்தளச் செய்திகள் 12
6. MIDS 13
7. திருமண ஆயத்தப்பயிற்சி 16
8. MCA 17
9. Health for One Million (Hom) 18
10. MCYM 19
11. பெயர்விழா நல்வாழ்த்துகள் 20
12. மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி, இலவுவிளை 21
13. மறைவட்ட செய்திகள் 24
14. ஆயரின் மார்ச் மாத நிகழ்வுகள் 26
15. இம்மாதம் நினைவு கூர 27
16. Bishop's Diary 28


Printed by
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



இறையருளினாலும் திரு ஆட்சிபீடத்தின் அனுகூலத்தாலும்
மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்
பெருந்தகை **வின்சென்ட் மார் பவுலோஸ்**
ஆண்டகையிடமிருந்து தம் ஆளுகைக்
குட்பட்ட அனைத்து குருக்களுக்கும்
துறவிகளுக்கும் இறைமக்கள்
அனைவருக்கும்
ஆசீர்.

Pro. No. EPL 1/2026 30.03.2026

## மேய்ப்பு மடல்

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே/ இருபால் துறவிகளே/ இறைமக்களே,***

### உயிர்தெழுதல் அதிர்ச்சியும் மகிழ்ச்சியும்

“ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம்” (திபா 118:24)

பாவத்தையும் மரணத்தையும் வென்று பச்சை புல் கூட ஆழ்ந்துறங்கும் வைகறை பொழுதில் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார். ஆண்டவரின் உயிர்ப்பு மகிழ்ச்சியும் அதிச்சியும் தந்தது. வெற்றுக் கல்லறையின் மௌன சாட்சியமும், இயேசு சீடர்களும், மகதலா மரியாவுக்கும் தந்த காட்சிகளும், உயிர்ப்பின் உண்மையை எடுத்தோதுகின்றன. இயேசுவின் பாடு, மரணம் இவற்றின் தொடர்ச்சியே உயிர்ப்பு. ஆண்டவரோடு தங்களுக்கிருந்த நெருக்கத்தை காட்ட அவரது உடலில் நறுமணத் தைலம் பூச புறப்பட்ட பெண்கள் கல்லறையில் கல் அகற்றப்பட்டிருப்பதைக்

கண்டு அதிர்ச்சியடைந்தனர். கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. அதற்கு ஒப்பான எந்த நிகழ்வுகளும் இல்லை. எந்த முன்மாதிரிகளும் இல்லை. இது கடவுளின் மாபெரும் செயல்.

திருச்சபை தந்தையான தெர்த்துல்லியன், ''இறைமகன் இறந்தார், அது முற்றிலும் நம்பத்தகுந்தது, அவர் அடக்கம் செய்யப்பட்டார், பின்னர் உயிர்த்தெழுந்தார், அது உறுதி. எனவே இது இறைவனின் செயல்" என்கிறார். இயேசுவின் உயிர்ப்பை பற்றிய முதல் விளக்கத்தை தூய பவுல் நமக்கு தருகிறார். "நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே; மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார்" (1கொரி 15:3-4). தூய பவுல் இதனை எழுதும் போது உயிர்ப்பின் சாட்சிகள் பலர் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

உயிர்ப்பின் மங்கள வார்த்தை கல்லறையிலிருந்து திரும்பிச் சென்ற பெண்களுக்கு வழங்கப்பட்டது. செய்தியைக் கேட்ட பெண்கள் துக்கத்திலிருந்து எழுச்சி அடைந்தனர். கல்லறையிலிருந்து கல் அகற்றப்பட்டிருப்பது உயிர்ப்பின் அடையாளம். கல்லை புரட்டி வைப்பது மரணத்தின் அடையாளம். கிறிஸ்துவின் கல்லறை மரணத்தை விழுங்கிவிட்டது. கல் அகற்றப்பட்டிருப்பது ஆண்டவர் வெளியே வருவதற்காக அல்ல. மாறாக வெற்றுக் கல்லறையை வெளியே காட்டுவதற்காகவே ஆகும். வானதூதர் "நீங்கள் அஞ்சாதீர்கள் என்றார்". உயிர்ப்பு நிகழ்வுக்குப் பின் முதலில் அச்சம் அகற்றப்படுகிறது. பின்னரே உயிர்ப்புச் செய்தி வழங்கப்பட்டது. "இதோ அவரை வைத்த இடத்தை பாருங்கள், அவர் இங்கே இல்லை. பெண்கள் நறுமணத் தைலம் பூச ஓடோடி வந்தனர். ஆனால் கிடைத்ததோ அவர் அங்கு இல்லாதது குறித்தான வெளிப்பாடு. ஆண்டவர் உயிருடன் எழுப்பப்பட்டார். இதனை விரைந்து சென்று அறிவிக்க ஆண்டவர் கட்டளையிட்டார். விரைந்து சென்று அறிவியுங்கள் என கட்டளை



துரிதத்தில் செயல்படுத்தப்பட்டது. அவரை நீங்கள் கலிலேயாவில் காண்பீர்கள் என்றார். இயேசுவின் திருப்பணி அங்கே தான் தொடங்கப்பட்டது. இதோ உயிர்த்த ஆண்டவரும் அங்குதான் தோன்றுகின்றார்.

உயிர்ப்புச் செய்தி பெண்களுக்கு அச்சமும், பெரு மகிழ்ச்சியையும் தந்தது. அச்சமும் பெருமகிழ்ச்சியும் இணைந்து செல்லாத இரு உணர்வுகள். அச்சமுள்ள இடத்தில், மகிழ்ச்சி இருக்காது. உளஅச்சமும் மகிழ்ச்சியும் ஒத்துப்போகாது. உயிர்த்த இயேசு 10 முறை சீடர்களுக்கு காட்சியளித்தார். இயேசுவைக்கண்ட சீடர்கள் மகிழ்ச்சியுற்றனர். இயேசுவை பழைய நிலையில் காண விரும்பிய தோமா நம்பிக்கையால் கண்டு திருப்தி அடைந்தார். உயிர்த்த இயேசு சீடர்களுக்கு வழங்கிய முதல் பரிசு மகிழ்ச்சியேயாகும்.

'என் அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்' என்றவர் உங்களுக்கு அமைதியென்று ஆசி கூறினார். உயிர்த்த இயேசு அளித்த இரண்டாவது பரிசு இது. பின்னர் அவர்கள் மீது ஊதி தூய ஆவியைக் கொடுத்து சீடர்களை துணிவுள்ள கூட்டமாக மாற்றினார். உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்னும் கட்டளையுடன் அவர்களை அனுப்பினார்.

அன்பானவர்களே நாம் வாழும் இந்த சமூகத்தில் ஒவ்வொரு நாளும் அச்சமும் மகிழ்ச்சியும் மாறி மாறி நம்மை தாக்குகின்றன. போர்களும், போர் முழக்கங்களும், பிரிவுகளும் பிளவுகளும், பகைமைகளும் நம்மை அதிர்ச்சியடையச் செய்கின்றன. தொழில்நுட்பம் ஒரு பக்கத்தில் நமக்கு உதவினாலும் மறுபக்கம் நம்மை அதிர்ச்சியில் மூழ்க வைத்திருக்கிறது. எல்லோரும் சகோதரர்கள் என்னும் எண்ணம் தவிர்த்து யார் பெரியவரென்ற எண்ணம் ஓங்கி, உலகமே அழிவின் பாதையில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. எல்லோரும் அச்சத்திலும் அதிர்ச்சியிலும் இருந்து கொண்டிருக்கிறோம். மேற்காசிய நாடுகளில் நடைபெறும்

போர்கள் கோடிக்கணக்கான மக்களுடைய உள்ளத்தில் கலக்கத்தை விதைத்திருக்கின்றன. கடவுள் தந்த இந்த பிரபஞ்சத்தை பேணி காப்பதற்கு பதிலாக மனிதன் அதனை இல்லாமல் செய்ய போர் கருவிகளால் போட்டி போடுகிறான். இதனால் உயிர் சேதம், சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீங்கு, பொருளாதார இழப்பு, நட்புறவுகள் போன்றவை மீட்டெடுக்க முடியாத வகையில் வீழ்ச்சியை கண்டு கொண்டிருக்கின்றன. உயிர்த்த இயேசு உலக முடிவு வரை நம்மோடு இருக்க விருப்பம் கொண்டார். உயிர்த்த ஆண்டவருடைய உடனிருப்பு நம்மை மகிழ்விக்க வேண்டும். ஏமாற்றம் தராத எதிர்நோக்கில் வாழும் நமக்கு இயேசுவின் உயிர்ப்பிலிருந்து எழும் எதிர்நோக்கில் நம்பிக்கை வைப்போம். மரணம் என்பது முற்றுப்புள்ளி அல்ல. மரணத்தின் தொடர்ச்சி உயிர்ப்பு என்பது மகிழ்ச்சி தரும் மங்கள வார்த்தை. ஆண்டவர் இயேசு வழங்கிய அமைதியென்னும் பரிசை உள்வாங்குவதற்கு எத்தனை உள்ளங்கள் தயாராகிறதோ அத்தனை உள்ளங்களிலும் புது ஒளி பிறக்கும், புது வாழ்வு மலரும்.

உயிர்த்த இயேசு வழங்கிய மகிழ்ச்சியும் அமைதியும் அனைத்தையும் நிறைவாக்கும் தூய ஆவியின் பிரசன்னமும் நம்மை நிறைப்பதாக. தம் ஒரே மகனை தந்த தந்தையையும் சிலுவையில் தம்மை பலியாக ஒப்புக்கொடுத்து நம்மை மீட்ட மகனையும், அனைத்தையும் நிறைவு செய்யும் தூய ஆவியையும் புகழ்ந்து மகிழ்வோம்.

உயிர்த்த இயேசு உங்கள் அனைவரது உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி வழங்குவராக !

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*

**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்



**Most Rev. Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist - 629 165

Cir. No. 3/2026 30.03.2026

## CIRCULAR

***உயிர்த்த ஆண்டவர் அருளிய அமைதி உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் தங்குவதாக!***

***கிறிஸ்துவில் அன்பான அருட்தந்தையர்களே, துறவிகளே, இறைமக்களே!***

உயிர்ப்பு விழாவை அதாவது இயேசு பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் அடைந்த வெற்றியை கொண்டாடி மகிழ்ந்திருக்கும் அனைவருக்கும் அமைதியின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இத்தருணத்தில் நமது மறைமாவட்டத்தின் முதல் ஆயராகிய மேதகு லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 29-வது நினைவுத் திருநாளை இந்த மாதம் 7, 8 தினங்களில் கொண்டாடுகின்றோம். 'உமது விருப்பம் எனது ஆனந்தம்' என்ற விருதுவாக்கை வாழ்ந்து, ஆண்டவர் இயேசுவையும் அவரது திருச்சபையும் மனதார நேசித்து, மறைதூதுப் பணியின் சிறந்த முன்மாதிரியாக இருந்தவர் மேதகு ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை. அவரது வாழ்வும் பணியும் நம்முடைய மறைமாவட்டத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. அடித்தட்டு மக்களை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்துவதையும், அனைவருக்கும் ஆரோக்கியம் வழங்குவதையும், நற்செய்தியை ஊர் எல்லைகளுக்கெல்லாம்

அறிவிப்பதையும் இலட்சியக் கனவாகக் கொண்டவரே லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை. நமது மறைமாவட்டத்தை பொறுத்தவரையில் அவர் விதைத்த விதைகள் ஒவ்வொன்றாக முளைத்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. அனைவரும் ஆரோக்கியம் பெற வேண்டும், உயர்கல்வி பெற வேண்டும், சமூகம் வளர்ச்சி காண வேண்டும் என்று மிகவும் விரும்பி துடிப்புடன் செயல்பட்டார். அவரது எண்ணங்களும் செயல்பாடுகளும் இன்றைய சமூகத்திற்கு உட்தூண்டுதலாக இருக்கின்றன. வாழ்க்கை பாணியினால் வரும் நோய்களினால் துன்புறும் இன்றைய சமூகம், 'வரும் முன் காப்போம்' என்ற அவரது சிந்தனைப்பாணியை செயலாக்கம் செய்வது துரிதமாக செய்ய வேண்டிய ஒன்று. மேதகு ஆயர் அவர்கள் மலங்கரை மக்கள் அரசு பணிகளில் ஆர்வத்துடன் இணைய வேண்டுமென்று விரும்பி, போட்டித் தேர்வுகளை எழுத பிள்ளைகளை ஊக்குவித்தார். அடுத்த கல்வியாண்டில் ஆயரின் அந்த முயற்சி நம்முடைய எல்லா பள்ளிக் கூடங்களிலும் தொடங்கப்பட இருக்கிறது. அவரது எண்ணங்களும், அவர் காட்டிய பாதைகளும் நமது பயணத்திற்கு துணை நிற்கின்றன. நம் மறைமாவட்டத்திற்காக நம்மோடு இருந்து இறைவனிடம் மன்றாடும் மேதகு ஆயர் அவர்களின் நினைவுக்கு முன் தலை வணங்கி அஞ்சலி செலுத்துவோம். ஏப்ரல் மாதம் 7-ம் தேதி செவ்வாய்கிழமை நடைபெறும் நினைவு பாதயாத்திரையிலும், 8-ம் தேதி நடைபெறும் நினைவுத் திருப்பலியிலும் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச் செல்ல அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன்.



## நிகழ்வள

### 07-04-2026 செவ்வாய்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | காலை ஜெபம், திருப்பலி<br>மார் எஃப்ரேம் நகர் (வெள்ளெலும்பு ஆலயம்) |
| காலை 9.30 மணி | : | தூப மன்றாட்டு - பின்குளம் |
| காலை 9.45 மணி | : | பாதயாத்திரை ஆரம்பம் |
| காலை 10.15 மணி | : | குழிஞ்ஞான்விளை |
| காலை 10.30 மணி | : | ஊரம்பு |
| காலை 10.45 மணி | : | சூழால் |
| காலை 11.00 மணி | : | புஷ்பகிரி சந்திப்பு |
| காலை 11.15 மணி | : | அம்பிலிகோணம் |
| காலை 11.30 மணி | : | அடைக்காகுழி சந்திப்பு |
| நண்பகல் 12.00 மணி | : | செறுவாரக்கோணம் |
| நண்பகல் 12.30 மணி | : | களியக்காவிளை |
| பிற்பகல் 12.45 மணி | : | படந்தாலுமூடு |
| பிற்பகல் 01.15 மணி | : | குழித்துறை மார் எஃப்ரேம் வளாகம்<br>(மதிய உணவு) |
| மாலை 03.30 மணி | : | பாதயாத்திரை தொடர்தல் |
| மாலை 04.00 மணி | : | வெட்டுமணி |
| மாலை 04.30 மணி | : | பேராலயம்<br>(ஆயரின் நினைவிடம் சென்றடைதல்)<br>தூப மன்றாட்டு, மாலை ஜெபம் |
| தலைமை | : | மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் |

### 08-04-2026 புதன்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | காலை ஜெபம் |
| காலை 7.00 மணி | : | நினைவுத் திருப்பலி |
| | : | பொதுக்கூட்டம் |
| | : | தூப மன்றாட்டு |

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*

† **மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# இளங்குருமடச் செய்திகள்

- 02.03.2026 திங்கள்கிழமை அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் குருமடத்திற்கு வருகை தந்து குரு மாணவர்களைச் சந்தித்தார். அவர்களுக்குத் தேவையான ஆன்மிக மற்றும் திருஅவை சார்ந்த அறிவுரைகளை வழங்கினார். திருஅவையின் தற்போதைய நிகழ்வுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து, அருட்சகோதரர்களை தயார்படுத்தினார்.
- 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று மேதகு ஆயர் அவர்கள் குருமடத்தில் திருப்பலி அர்ப்பித்து, ஆழமான மற்றும் ஆன்மிக வளம் நிறைந்த மறையுரையை வழங்கினார். மேலும், அனைவருக்காகவும் சிறப்பாக ஜெபித்தார்.
- 24.03.2026 அன்று உயர் குருமட அருட்சகோதரர்கள் இளம் குருமடத்திற்கு வருகை தந்து அதிபர் மற்றும் துணை அதிபர் தந்தையர்களைச் சந்தித்தனர். அனைவரும் இணைந்து, வரவிருக்கும் விடுமுறை நாட்களில் நடைபெறவுள்ள நிகழ்வுகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆலோசித்து பல முக்கியமான தீர்மானங்களை எடுத்தனர். துணை அதிபர் தந்தை அவர்கள் நிகழ்வுகளுக்கான கால அட்டவணையை தொகுத்து வழங்கினார்.
- 25.03.2026 அன்று, பள்ளி மாணவர்கள் தங்களது பள்ளித் தேர்வுகளையும், குருமட மாணவர்கள் தங்களது குருமடத் தேர்வுகளையும் வெற்றிகரமாக முடித்து, கோடை விடுமுறைக்காக தங்களது இல்லங்களுக்குச் சென்றனர்.
- 27.03.2026 அன்று மாவட்ட அளவில் இறச்சகுளம் பகுதியில் ஆண்டுதோறும் நடைபெறும் கல்வாரி பயணத்தில், இவ்வாண்டும் அருட்சகோதரர்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்று, இயேசு கிறிஸ்துவின் பாடுகளை ஆழமாக தியானித்தனர்.



# தவக்கால தியானம்

மார்த்தாண்டம் மத்திய பேரவையின் தவக்கால தியானம், 31.03.2026 அன்று மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. காலை 9:30 மணிக்கு மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அவர்களின் ஆரம்ப ஜெபம் மற்றும், ஆசியுரையுடன் ஆரம்பமானது. மத்திய சபையினுடைய தலைமை பணியாளர் சகோதரர் இயேசு ராஜன் அனைவரையும் வரவேற்றார்கள். தொடர்ந்து அருட்தந்தை ரோபின் அவர்கள் தியானவுரை நிகழ்த்தினார்கள். அவர் வின்செந்திய அழைப்பின் மேன்மையையும், வாழ்க்கை முறையும் குறித்து தெளிவு படுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து அருட்சகோதரர் சுபின் அவர்கள், நற்கருணை ஆராதனையை வழிநடத்தினார்கள். இறுதியில் மத்திய பேரவையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை பிபின் அவர்களால் நற்கருணை ஆசீர் வழங்கப்பட்டது. சகோதரர் ஆன்றோ அவர்கள் பாடல் ஆராதனை நடத்தினார்கள். கூட்டத்தில் மார்த்தாண்டம் பேராலய இணைப்பங்கு தந்தை அருட்தந்தை பால்சன், அருட்சகோதரி ஜோமேரி, மத்திய பேரவையினுடைய பொறுப்பாளர்கள், வட்டார சபையினுடைய பொறுப்பாளர்கள், கிளை சபை உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். மார்த்தாண்டம் வட்டார சபையும், பேராலயத்தின் பொறுப்பாளர்களும் நிகழ்விற்கான ஒழுங்குமுறைகளை செய்து உதவினார்கள். இறுதியில் மத்திய பேரவையினுடைய ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை விபின் அவர்கள், அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

## பெயர்விழா கொண்டாட்டம்

❖ 19.03.2026 அன்றைய தினம் கத்தோலிக்க திருஅவை புனித சூசையப்பர் திருவிழாவை கொண்டாடியது. மார்த்தாண்டம் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை. ஜோஸ் பிரைட் அவர்கள் தங்களுடைய பெயர் கொண்ட விழாவை சிறப்பித்தார்கள். ஆயர் இல்லத்தில் வைத்து மறைமாவட்ட ஆயர் தலைமையில் மறைமாவட்ட குருக்களும் பெயர்விழா கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## மறைபரப்பு தளச் செய்திகள்

❖ **தேவதானப்பட்டி :** தேவதானப்பட்டி தூய தைநேசி மாதா சர்ச்சில், மார்ச் 23 உலக பொம்மலாட்ட தினத்தை முன்னிட்டு பொம்மலாட்டம் கலை நிகழ்ச்சி நடந்தது. அருட்தந்தை ஷாஜி கிறிஸ்டோ தலைமை வகித்தார். பொம்மலாட்டம் கலைஞர்கள், வெயிலோடு விளையாடு தலைப்பில் கலை நிகழ்ச்சியில், கோடை விடுமுறையில் வெயில் தாக்கத்தை எவ்வாறு மேற்கொள்வது என பொம்மலாட்ட கலைஞர் பாபுதாசன் குழுவினர் பொம்மலாட்டத்தின் வாயிலாக உணவு முறைகள், உடல் தூய்மை குறித்து எடுத்துரைத்தனர்.

இதில் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர். திருக்குறள் கூறும் பொம்மலாட்டம் என்ற போட்டி நடந்தது.

இதில் திருக்குறள் கூறி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை ஜி. கல்லுப்பட்டி கலைக்கூடம் பொம்மலாட்டம் கலைஞர்கள் செய்திருந்தனர்.



## மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### வழிகாட்டுதல் பயிற்சி

குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வழியாக தற்போது 439 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. அவர்களுக்கு 02.03.2026 முதல் 06.03.2026 வரை நான்கு கட்டங்களாக வழிகாட்டுதல் பயிற்சி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்து திட்டத்தின் நோக்கம் மற்றும் வழிமுறைகள் குறித்தும், பயனாளிகள் திட்டத்திற்கு தகுந்த ஒத்துழைப்பு எவ்வாறு நல்க வேண்டும் என்றும் விளக்கி கூறினார்கள். திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து Dr. அரசு (Director, Sunlight Wellness Centre) அவர்களால் தன்னம்பிக்கையுள்ள தாய்மார்கள் மற்றும் இளையோரை உருவாக்குவது எப்படி என்பது குறித்து பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் பயனாளிகள் தாங்கள் இத்திட்டத்தின் வழியாக பெற்ற நன்மைகளை பகிர்ந்தனர். இந்த பயிற்சிகளில் மொத்தம் 411 பயனாளிகள் கலந்துகொண்டனர்.

### மகளிர் தினவிழா

அகில உலக பெண்கள் தினம் ஆண்டுதோறும் மார்ச் 8-ம் தியதி கொண்டாடப்பட்டு வருகின்றது. மிட்ஸ் நிறுவனமானது 07.03.2026 அன்று நடைக்காவு மலங்கரை கத்தோலிக்க ஆலய சமூக நல கூடத்தில் வைத்து "Rights Justice Action for ALL Women and Girls" என்னும் கருப்பொருளை மையமாக வைத்து பெண்கள் தினவிழாவை சிறப்பித்தது. விழா துவக்கமாக களியக்காவிளை பணிமண்டல இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் அவர்களால் நடைக்காவு மலங்கரை கத்தோலிக்க பள்ளிகூடத்தில் வைத்து மகளிர் தினபேரணியானது

துவங்கி வைக்கப்பட்டது. நடைக்காவு ஆலயம் வந்தடைந்த இப்பேரணியை தொடர்ந்து, மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் விழா கூட்டம் நடைபெற்றது. சின்னத்துறை வார்டு உறுப்பினர் திருமதி லீலா விஜூ அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மகளிர் தின சிறப்புரை வழங்கினார்கள். தொடர்ந்து ஆயர் அவர்கள் தமது தலைமை உரையில் பெண்களின் ஆற்றல் மற்றும் சமூகத்தில் பெண்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக்கூறி மகளிரை வாழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து தனது கடின உழைப்பால் முன்னுக்கு வந்த மஞ்சத்தோப்பை சேர்ந்த திருமதி P. மேரிஷீபா, இயற்கை விவசாயம் செய்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பாலவிளையைச் சேர்ந்த திருமதி P. செல்வி, மிட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தன்னார்வலராக செயல்பட்டு வரும் சின்னத்துறையை சேர்ந்த திருமதி. J. நீத்தம்மாள், சமூகத்தில் நோயால் பாதிக்கப்பட்ட பல்வேறு மக்களுக்கு உதவிகள் செய்தும், தக்கவழி காட்டுதல்கள் வழங்கியும் வரும் அடைக்காகுழியை சேர்ந்த திருமதி G. பேபி மேரி மற்றும் புற்றுநோயிலிருந்து மீண்டு சிறுதொழில் செய்துவரும் பாத்திமாநகரைச் சேர்ந்த திருமதி N. லில்லி ஆகியோர் விழா மேடையில் ஆயர் அவர்களால் கேடயமும், ஊக்கப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டனர். விழாவின் இடையே கிராத்தூர் கிளஸ்டர் உறுப்பினர்களின் நடன நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து தேசிய கீதத்துடன் விழாவானது நிறைவுற்றது. இந்தவிழாவில் 650 க்கும் மேற்பட்ட சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

**உதவித்திட்டங்கள்**

1. 13.03.2026 அன்று கக்கறா கடன் வழங்கும் திட்டத்தின் வழியாக 41 கோல்பிங் குடும்பங்களுக்கு மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் 96 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டது.



2. 18.03.2026 அன்று களியக்காவிளை பணிமண்டலத்தின் கீழ் செயல்படும் 8 சுய உதவி குழுக்களில் உள்ள 32 உறுப்பினர்களுக்கு பல்வேறு சிறுதொழில்கள் செய்ய ரூபாய் 16,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

3. 23.03.2026 அன்று 14 கோல்பிங் குடும்ப உறுப்பினர்களுக்கு பல்வேறுசிறு தொழில்கள் செய்ய 14,00,000/- ரூபாயும், 40,000/- ரூபாய் வீதம் 5 உறுப்பினர்களுக்கு ரூபாய் 5,00,000/-ம் கடன் உதவியாக வழங்கப்பட்டது.

4. 19.03.2026 அன்று பல்வேறு திட்டங்களின் கீழ் உயர் கல்விக்கான கடன் உதவித்தொகைகள் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்களால் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. அவற்றின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| Sl. No. | Name of the Programme | Number of students | Assisted Amount (per student) | Total |
|---|---|---|---|---|
| 01. | Jubilee Higher Education Scholarship | 26 | Rs. 25,000/- | Rs.6,50,000/- |
| 02. | AASTHI Higher Education Scholarship | 18 | Rs. 20,000/- | Rs. 3,60,000/- |
| 03. | Mandy Higher Education Scholarship | 33 | Rs. 20,000/- | Rs. 6,60,000/- |
| 04. | Divine Mercy Higher Education Scholarship | 13 | Rs. 25,000/- | Rs. 3,25,000/- |

## பிறநிகழ்வுகள்

1. விண்ணைத்தொடு திட்டத்தின் சார்பாக பங்கு வாரியாக குழந்தைகள் நல குழுவை உருவாக்கும் முயற்சிக்கான கலந்தாய்வு கூட்டம் குலசேகரம் மற்றும் மார்த்தாண்டம் மறைவட்டங்களின் அருட்தந்தையர்களை ஒருங்கிணைத்து 09.03.2026 மற்றும் 11.03.2026 ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் விண்ணைத்தொடு திட்டபணியாளர்கள் கலந்து கொண்டனர்.

2. 14.03.2026 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு பயிற்சி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் 35 மாணவர்களும் 25 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

3. South Indian வங்கியானது CSR (Corporate Social Responsibilities) நிதி வாயிலாக தளிர்கள் உலகம் திட்டத்தில் பயன்பெற்றுவரும் 320 மாணவர்களுக்கு இலவச ஆங்கிலம் தமிழ் அகராதிகளை வழங்கியுள்ளது. இந்த அகராதிகளை 18.03.2026 அன்று சௌத் இந்தியன் வங்கியின் மதுரை மண்டல முதன்மை மேலாளர் திரு. அருண் பாலாஜி, மேலாளர் திரு. செபிஷ் செபாஸ்டின் மற்றும் மார்த்தாண்டம் கிளை வங்கி மேலாளர் திரு. ராஜூ தோமஸ் ஆகியோர் முன்னிலையில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் மாணவமாணவிகளுக்கு வழங்கினார்கள்.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**2026 ஏப்ரல்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **17, 18** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# MCA
## Diocese of Marthandam

### நாகர்கோவில் மறைவட்ட MCA சந்தித்தல்

நாகர்கோவில் மறைவட்ட பங்குகளில் MCA சரியாக செயல்பட வைக்க, மறைவட்ட மேலாண்மைக் குழு கூட்டம் நடைபெற்ற 08.03.2026 அன்று நாகர்கோவில் பெருவிளை ஆலயத்தில் வைத்து மறைமாவட்ட ஆன்மீக இயக்குனர் மற்றும் தலைவர் திரு. யோ. வர்க்கீஸ் ஆகியோர்களுடன் சில நிர்வாகிகளும் சந்தித்தனர், மறைவட்ட முதன்மைகுரு ஜாண்குமார் மறைவட்ட MCA இயக்குனர் அருட்தந்தை நோபர்ட் மறைவட்ட தலைவர் திரு. செல்வராஜ், திரு, ஸ்டீபன், திருமதி அல்போன்சாள் மற்றும் பங்குகளிலிருந்து பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். மேற்படி கூட்டத்தில் கருத்துக்கள் பரிமாறப்பட்டு, தொடர்ந்த செயல்படுத்தி திட்டங்கள் தீட்டப்பட்டு விரைந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த சந்தித்தல். பயனுள்ள வகையில் அமைந்தது.

### சபையளவிலான மேலாண்மை குழு கூட்டம்

சபையளவிலான மேலாண்மை குழு கூட்டம் மாவேலிக்கரை மறைமாவட்டம். சாருமூடு ஆலயத்தில் வைத்து புதிய செயர்மான் மேதகு ஆயர் மேத்யூஸ் மார் போலிக்கார்ப்பஸ் அவர்களுக்கு வரவேற்பும், வாழ்த்தும் வழங்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் திரு. வர்க்கீஸ், திரு. பால்ராஜ், திருமதி. பேபிமேரி ஆகியோர்கள் கலந்து கொன்டனர். நமது மறைமாவட்டத்திற்கு ஒரு நபருக்கு வீடு கடட 6,00,000/- (ஆறுலட்சம்) சபையளவிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது வீடு வழங்க மனுக்கள் பெறப்பட்டு வருகிறது.

## மறைமாவட்ட மேலாண்மை குழு கூட்டம்

மறைமாவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்க மேலாண்மை குழு கூட்டம் 22.03.2026 அன்று நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1) 08.04.2026 அன்று மேதகு ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு நாளில் மறைமாவட்டத்தை சார்ந்த மேல்படிப்பிற்காக கல்வி உதவித்தொகையாக ரூ. 10,000/- வீதம் நான்கு நபர்களுக்கு வழங்கப்படும்.

2) உதவும் கரங்கள் திட்டத்தின் கீழ் இரண்டு நோயாளிகளுக்கு மருத்துவ உதவி வழங்கப்படும்.

## HEALTH FOR ONE MILLION (HOM)

### Diocese of Marthandam

- மார்ச் 18 –ம் தியதி அன்று மார்த்தாண்டம் அலகின் HOM சுயஉதவிக் குழுவில் ஆரோக்கிய நலவாழ்வு மற்றும் சிறுநீரக பாதுகாப்பு குறித்த குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. அருட்சகோதரி ஐஸ்வர்யா மற்றும் Palliative Care செவிலியர்கள் திருமதி ஷீபா மற்றும் திருமதி ஆஷா ஆகியோர் பயிற்சியளித்தனர்.
- மார்ச் 21 –ம் தியதி அன்று கொட்டாரம் அலகின் HOM சுய உதவிக் குழுவில் சிறுநீரக பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. HOM பணியாளர் திரு. லிஸ்பின் சிறுநீரக பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுரையாற்றினார்.



## MCYM
### Youth Apostolate

✶ **FIAT MISSION :** கத்தோலிக்க திருச்சபையில் செயல்படுகின்ற FIAT MISSION என்ற அமைப்பிலிருந்து விவிலியம் இல்லாத மறைபரப்பு தளங்களில் விவிலியம் மொழிபெயர்த்து கொடுக்கும் பணியை செய்கிறார்கள். அதற்காக நமது வீடுகளில் இருக்கின்ற பழைய விவிலியங்கள் மற்றும் ஏதேனும் புத்தகங்கள் மறை மாவட்டத்தில் ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை அவர்கள் மறுசுழற்சி செய்து விவிலியமாக தயாரித்து கொடுக்கின்றார்கள். அதற்காக இந்த புத்தகங்களை சேகரிக்கும் பணியை மறைமாவட்ட MCYM செய்கிறது.

அதன் முதல் முயற்சியாக ஆண்டு திட்ட துவக்க விழாவின் போது ஐந்து கிலோ எடை உள்ள பழைய புத்தகங்கள் மற்றும் திருவிவிலியம் ஆகியவை மறைமாவட்ட MCYM இயக்குனர் அருட்தந்தை ஜஸ்டின் அவர்களால் மேதகு ஆயர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை ரதீஷ் ரிச்சார்ட்
ஏப்ரல் 03



அருட்தந்தை செலஸ்டின்
ஏப்ரல் 06



பேரருட்தந்தை S. வர்கீஸ்
ஏப்ரல் 23



அருட்தந்தை G. வர்கீஸ்
ஏப்ரல் 23



அருட்தந்தை ஜார்ஜ் தாவரத்தில்
ஏப்ரல் 23



அருட்தந்தை G. ஜீவின் ஜார்ஜ்
ஏப்ரல் 23



அருட்தந்தை வில்பின் விஜு
ஏப்ரல் 23



அருட்தந்தை பீட்டர் ஆனந்த்
ஏப்ரல் 29



# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

**National Lavel Techno Management Fest** CHWANI 26

மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரியின் தேசிய அளவிலான தொழில்நுட்ப மேலாண்மை விழா 18.03.2026 புதன்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் இறைவணக்க பாடலுடன் துவக்க விழா ஆரம்பமானது. முதலாமாண்டு MBA மாணவிகள் கண்கவரும் வரவேற்பு நடனம் ஆடினர். I MBA மாணவி Fenitline Ratna வரவேற்புரை ஆற்ற விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றினார்கள். Rt. Rev. Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமை உரை ஆற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். வணிக மேலாண்மை துறை உதவி பேராசிரியை Mrs. நிக்ஸிலின் பியூலா சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். Dr. கலியமூர்த்தி IPS அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்கள் பயன்பெறும் வகையில் நல்லதொரு சிறப்புரை ஆற்றினார். தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்தும் திருக்குறளை மையப்படுத்தியும் சிறந்த கருத்துக்களை வழங்கினார். துவக்க நிகழ்ச்சிக்கு பின் மாணவ மாணவியருக்கான போட்டிகள் நடத்தப்பட்டது.

இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு தனித்தனியாக 30 போட்டிகள் நடத்தப்பட்டன, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சென்னை, திருவனந்தபுரம், கன்னியாகுமரி போன்ற பகுதிகளிலிருந்தும் 36 கல்லூரிகளிலிருந்து சுமார் 1076 மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். மார் எப்ரேம் கல்லூரியிலிருந்தும் சுமார் 240 மாணவர்கள் போட்டிகளில்

பங்கேற்றனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்ப்பட்டது. புள்ளிகளின் அடிப்படையில் Overall Trophy யும் வழங்கப்பட்டது.. நிறைவு விழாவில் Sponsors மற்றும் Promoters கௌரவிக்கப்பட்டனர். மாலை சுமார் 5.30 மணியளவில் தேசிய கீதத்துடன் இனிதே நிறைவடைந்தது.

**மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரி ஆண்டு விழா – 2026**

மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரியின் ஆண்டு விழாவானது 16.03.2026 அன்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது.

இந்நிகழ்ச்சி உற்சாகமான வரவேற்பு நடனத்துடன் தொடங்கப்பட்டது. தொடர்ந்து கல்லூரி பாடகர் குழுவினரால் பிரார்த்தனை பாடல் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது.

அதனை தொடர்ந்து குத்துவிளக்கேற்றும் நிகழ்ச்சி) நடைபெற்றது. பின்னர் கல்லூரியின் தாளாளர் செயலர் அருட்தந்தை சதீஷ் குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் வளர்ச்சி, சாதனைகள் மற்றும் எதிர்கால நோக்கங்களை விளக்கும் வகையில் முதல்வர் பேராசிரியர் Dr. A. லெனின் பிரெட் அவர்கள் ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

இந்நிகழ்வில், கல்லூரியின் Chairman Most Rev. Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார், தொடர்ந்து பெருமதிப்பிற்குரிய Most Rev. Dr. யூஹானோன் மார் கிறிஸோஸ்டம் அவர்கள் அதிபரின் உரை வழங்கி மாணவர்களுக்கு உந்துதலான கருத்துக்களை பகிர்ந்தார்.



இந்நிகழ்ச்சியில் மாணவர்களின் திறமையை வெளிப் படுத்தும் வகையில் சிறப்புபாடல் திரு ஹார்லின் மற்றும் குழுவினரால் வழங்கப்பட்டது.

பின்னர் இந்திகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் Dr. M. ஜெப்பிரியா முதன்மை விருந்தினரை அறிமுகப்படுத்த முதன்மை விருந்தினரின் உரையில், புதுமை மற்றும் தொழில் முனைவு திறன் குறித்து மாணவர்களுக்கு பயனுள்ள அறிவுரைகளை முதன்மை விருந்தினர் வழங்கினார். அதன்பின் மாணவர் ஒருங்கிணைப்பாளர் D. தேனா அவர்கள் கௌரவ விருந்தினரை அறிமுகப்படுத்தினார். ராட்ஸ் பான் வயர்லெஸ் சிஸ்டம் நிறுவனத்தின் நிறுவனர் Dr. தனேஷ் ஜிகுருப் அவர்கள் கௌரவ விருந்தினர். உரை வழங்கி தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் தொழில் முனைவு வாய்ப்புகள் குறித்த கருத்துக்களை பகிர்ந்தார். நிகழ்ச்கியின் ஒரு அங்கமாக மாணவர்களின் கலைத்திறமையை வெளிப்படுத்த சிறப்பு நடனம் திரு ஜெர்சிங் மற்றும் குழுவினரால் வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து கல்வித்துறை டீன் பேராசிரியர் Dr. N. ஆஸ்டின் அவர்கள் பாராட்டு உரை வழங்கினார். பின்னர் தாளாளரும் செயலருமான அருட்தந்தை சதீஷ்குமார் முதன்மை விருந்தினரை கௌரவித்தார். அதன் பின்னர் மாணவர்களின் சாதனைகளை பாராட்டும் வகையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியின் நிறைவில், கல்லூரியின் பொருளாளர் அருட்தந்தை ஹெபின் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இவ்விழா தேசிய கீதத்துடன் சிறப்பாக நிறைவடைந்தது.

# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

❖ குலசேகரம் மறைவட்டம் சார்பாக சேகரிக்கப்பட்ட அரிசி, நோட்டு புத்தகங்கள், எண்ணை வகைகள், மசாலா பொருட்கள், சுகாதார பொருட்கள், தானிய வகைகள் போன்ற ஒறுத்தல் காணிக்கைகள் மார்ச் 29 அன்று மாலையில் மார்த்தாண்டம் விமலா பாலர் பவன் குழந்தைகள் இல்லத்தில் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மறைவட்ட குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் பங்குகளில் இருந்து வந்த பொறுப்பாளர்கள் மற்றும் இறைமக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## நாகர்கோவில் மறைவட்டம்

❖ மறைமாவட்ட தொழிலாளர் நலப்பணிக்குழு சார்பில், நாகர்கோயில் மறைவட்டத்தில் தொழிலாளர் நல விழிப்புணர்வு கூட்டம் மற்றும் பொறுப்பாளர் தேர்வு புனித தேவசகாயம் திருத்தலத்தில் வைத்து மார்ச் 8 ஆம் நாள் மறைமாவட்ட இயக்குனர் பேரருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையில், மறைமாவட்ட இந்திய தொழிலாளர் கூட்டமைப்பு தலைவர் திரு. பால் ராஜ் மற்றும் பொருளர் திரு. ராபின்சன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை சுனீஷ்குமார் அவர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தினார்கள். தொழிலாளர் நல வாரிய தென் மண்டல பொறுப்பாளர் வழக்கறிஞர் திரு. ஜெயசிங் மற்றும் புலம்பெயர் தொழிலாளர் மற்றும் வெளிநாடு வாழ் மக்களுக்கு உதவும் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் திருமதி. முத்துமலர்



ஆகியோர் பங்கேற்று கருத்துரை வழங்கினார்கள். இறுதியில் நாகர்கோயில் மறைவட்ட இந்திய தொழிலாளர் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதன்படி,

1. தலைவர் திரு. அருள்குமரேசன், கிறிஸ்து விளாகம் பங்கு
2. துணை தலைவி திருமதி. புனிதகலா, ஆரல்குமாரபுரம் பங்கு
3. செயலர் திருமதி ஜான்சி, தேனிக்குளம் பங்கு
4. இணை செயலர் திரு. சுமன், ஆனைபொற்றை
5. பொருளர் திரு. சிகாமணி, கன்னியாகுமரி பங்கு

ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பனச்சமூடு மறைவட்டம்

❖ திருவழிபாட்டு ஆண்டை முன்னிட்டு பனச்சமூடு மறைவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளை சார்ந்த திருத்தூயக பணியாளர்கள், புதுநன்மை பெற்றுக் கொண்ட பிள்ளைகளுக்கான சிறப்பு கூடுகை மார்ச் மாதம் 21 ஆம் தேதி நடைபெற்றது. இக்கூடுகையினை பாசமிக்க ஆயர் அவர்கள் தலைமையேற்று துவக்கி வைத்தார்கள். கூடுகையின் போது மறைவட்ட குருக்கள் திருப்பலி, திருவழிபாடு, பாவ சங்கீர்த்தனம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பற்றி பிள்ளைகளுக்கு எடுத்துரைத்தார்கள். இக்கூடுகையில் கலந்து கொண்ட அனைத்து பிள்ளைகளும் திருப்பலிமுறை, பொது ஜெபமுறை புத்தகங்களை கொண்டு வந்தார்கள். மறைவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளில் இருந்தும் திருத்தூயக பணியாளர்கள், புதுநன்மைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகள் அனைவரும் ஆர்வத்தோடு இக்கூடுகையில் கலந்து கொண்டார்கள்.

# ஆயரின் மார்ச் மாத நிகழ்வுகள்



7 ➤ நடைக்காவில் வைத்து MIDS சார்பாக நடைபெற்ற மகளிர் தினவிழா சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

8 ➤ பனச்சமூடு தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

14 ➤ KIMS மருத்துவமனை சுங்காங்கடையில் நடைபெற்ற Iftar நோன்பு துறத்தல் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

15 ➤ உண்ணாமலைக்கடையில் வைத்து நடைபெற்ற MCYM ஆண்டு திட்ட துவக்கவிழாவில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.

16 ➤ இலவுவிளை மார் எப்ரேம் கல்லூரி ஆண்டு விழாவில் தலைமையுரையாற்றி ஆசீர் வழங்கினார்.

19 ➤ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அடிகளாரின் பெயர்விழா சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாழ்த்தி ஆசீர்வதித்தார்.

19 ➤ கன்னியாகுமரி மாவட்ட ஆயர் கூடுகையில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றினார்.

22 ➤ வள்ளவிளையில் தூத்தூர் வட்டார சிலுவை பாதையில் கலந்து கொண்டு மறையுரை வழங்கி ஆசீர்வதித்தார்.

27 ➤ இறச்சக்குளத்தில் 40-ம் நோன்பு சிறப்பு சிலுவைப்பாதையில் கலந்துகொண்டு அருளுரை வழங்கி மக்களை ஆசீர்வதித்தார்.


29 ➤ மார்த்தாண்டம் பேராலயத்தில் ஓசானா திருச்சடங்குகளும், திருப்பலியையும் நிறைவேற்றி அனைவரையும் ஆசீர்வதித்தார்.



## இம்மாதம் நினைவு கூர

ஏப்ரல் 2026

01 – திருப்பாடுகளின் புதன்
02 – பாஸ்கா வியாழன்
03 – புனித வெள்ளி
04 – புனித சனி
05 – உயிர்ப்புத் திருநாள்
ஹேவோறெ வாரம்
08 – லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு
10 – அனைத்து மௌதியானன்மார்கள்
12 – புது ஞாயிறு
திருத்தந்தை புனித யூயோஸ்
ஆப்ரஹாம் மார் யூலியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
13 – மார் செறாபியோன்
14 – மார் செமஊன் பெர்ஸாபோயோ
19 – உயிர்ப்புக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
23 – மார் கீவர்கீஸ்
25 – நற்செய்தியாளர் புனித மாற்கு
26 – உயிர்ப்புக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
27 – புனித கிளீற்றஸ்
28 – ஐசக் மார் யூஹானோன் ஆண்டகையின் நினைவு
சியன்னா நகரின் புனித கத்தரீனா
30 – செபதேயுவின் மகன் மார் யாக்கோபு

8


23


25


25


## தவக்கால தியானம்







## MIDS




## MCA





## Health for One Million (HOM)





## MCYM






## மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி, இலவுவிளை












## மறைவட்ட செய்திகள்



குலசேகரம்









பனச்சமூடு





நாகர்கோவில்